# தீபாவளிச்சந்தைக் கடைகளை

# அகற்றாதீர்



## அமைச்சர் – டத்தோ பண்டாருக்கு வியாபாரிகள் மகஜர்

பி.மலையாண்டி

கோலாலம்பூர், அக். 22–

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பிரிக்பீல்ட்ஸ் லிட்டில் இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ள கடைகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது எனக் கோரி வியாபாரிகள் நேற்று கோலாலம்பூர் மாநகர் மன்ற அலுவலகத்தின் முன் அமைதி மறியலில் ஈடுபட்டனர்.



தீபாவளி கலைவிழாவை நடத்துவதற்கான மேடையை அமைப்பதற்காக ஏற்கெனவே போடப்பட்டிருந்த கடைகளை அகற்ற வேண்டும் என்ற உத்தரவை ஒருபோதும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

பக்கம் 15

முதல் பக்கத் தொடர்ச்சி

**தீபாவளிச் சந்தை ..**

தீபாவளி சமயத்தில்தான் ஏதோ வருமானம் ஈட்டுகின்றோம். இது எங்கள் வயிற்றுப் பிழைப்பாகும். எனவே எங்கள் பிழைப்பில் மண்ணைப் போடாதீர்கள் என்று நேற்றுக் கூடியிருந்த வியாபாரிகள் கோரிக்கையை முன்வைத்தனர்.

அதேசமயம் கடந்த வெள்ளிக்கிழமை சில கடைகள் அகற்றப்பட்டது தொடர்பில் வியாபாரிகள் தங்களின் ஆட்சேப மனுவை பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா, டத்தோ பண்டார் டத்தோ மைமுனா ஆகியோரிடம் சமர்ப்பித்தனர். அந்த ஆட்சேப மனுக்களை அதிகாரிகள் பெற்றுக்கொண்டனர்.

முன்னதாக வெள்ளிக்கிழமை சில கடைகள் அகற்றப்பட்டது பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. நாங்கள் இங்கு கடைகளை அமைத்து கடந்த 2 வாரங்களாக வியாபாரம் செய்து வருகின்றோம். இந்நிலையில் கலைநிகழ்ச்சிக்கு மேடை அமைப்பதற்கு எங்கள் கடைகளை அகற்றுவதா என சம்பந்தப்பட்ட வியாபாரிகள் கேள்வி எழுப்பியிருந்தனர்.